செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

[வெள்ளிக்கிழமைதோறும்] வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ0] யாழ்ப்பாணம்:- கீலக ௵ மாசி மீ ௧0 உ வெள்ளிக்கிழமை (21-2-1969) [இலக்கம் ...]

## திருமுறைகளைக் கற்று வல்லவர்கள் ஓதுதல் வேண்டும்

(கீலக ஆண்டு தைத் திங்கள் 20-ஆம் நாள் (2-2-69) ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி-திருமுறைக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பன்னிருதிருமுறை மலர் வெளியீட்டுவிழாவின்போது தொகுவில் சைவப்புலவர் திரு. த. குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள் ஆற்றிய தலைமையுரை.)

நன்னெஞ்சே யுனையிரந்தேன்
நம்பெருமான் திருவடியே
யுன்னஞ்செய் திருகண்டா
யுய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத்
தாரமுதை யெப்போதும்
பன்னஞ்சீர் வாயதுவே
பார்க்கணனை பரிக்கிடவே.

உலக முதல்வராய அம்மையப்பர் திருவடிகளைச் சிந்தையினும் சிரத்திலும் பதித்து வணங்கி அவனைக் கொண்டு எனது கடமையைச் செய்ய முயல்கின்றேன்.

சபையோர்களே! நம்மெல்லோரையும் இங்கு விநாயகப்பெருமான் சந்நிதானத்திலகுழுமியிருந்து நல்லனவற்றைப் பேசவும் கேட்கவும் வாய்ப்பளித்த திருமுறைக் கழகத்தாருக்கு எனது அன்புமிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக் கழகத்தின் பெயர் மூன்று சொற்களால் அமைந்திருக்கின்றது.

திரு: என்பது இறைவன் உயிர்கள் உய்யவேண்டுமென்று திருவுள்ளத்தில் கொண்ட கருணையே. திருவருள் எனவும் கொள்ளலாம். இக் கருத்துப் பற்றியே திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம், என்று திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேராசிரியர் கூறினார் போலும். காண்டல் அறிவாற் காண்டல், அனுபவத்தாற் காண்டல், என இருவகைப்படும். அறிவாற் காண்டலாவது வேத, சிவாகம சாத்திர திருமுறைகளைக் குருமுகமாகக் கற்று மெய்ப்பொருளை அறிதல். அனுபவத்தாற் காண்டலாவது குரு உணர்த்திய வழியின்று மெய்ப்பொருளைத் தம்முள்ளே தெளிந்து கொள்ளுதல். "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி" என அனுபவனுவா வாக்கு ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

முறை: நெறி, ஒழுங்கு, புத்தகம் எனப் பல கருத்துக்களையுடையது. அது பவத்தால் காண்பதற்கு வாயிலாய்உள்ளது. ஒழுக்க நெறி நின்றுகற்கும் கல்வி அறிவு

கழகம்: பலர்கூடி ஆராய்ந்து உண்மை காணவும் ஏனையோருக்கு அறிவிக்கவும் நிலைக்களமாய் அமைவது முன் இருசொற்களும் இரண்டிரண்டு எழுத்துக்களாய் இருப்ப கழகம் என்பது நான்கெழுத்துக்களால் அமைந்திருப்பது இரண்டெழுத்துக்கள் வல்லினம் ஒன்று இடையினம் ஒன்று மெல்லினம். எனவே அறிவுவன்மை உடையவர்கள் மென்மையுடையவர்களையும், இடைப்பட்ட தன்மையுடையவர்களையும், தம்முடன் கூட்டி மெய்ப்பொருளை உணர்வு பெறச் செய்து ஒழுக்க நெறி நின்று அநுபவம் பெற முயல்வது என்பது. திருமுறைக் கழகம் என்பதன் பொருளாம. பன்னிரண்டு திருமுறைகளும் படிப்பவர் கேட்பவர்களுக்கு அன்பு மிகுதியை ஆக்கி உள்ளம் உருகச் செய்யும் சிறப்பு வாய்ந்தன.

| | |
|---|---|
| திருஞானசம்பந்த சுவாமிகள் | 1, 2, 3 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் | 4, 5, 6 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 7 |
| மாணிக்கவாசக சுவாமிகள் | 8 |
| சேந்தனர் முதல் ஒன்பதின்மர் | 9 |
| திருமூலர் | 10 |
| திருவாலவாயுடையார் முதல் பன்னிருவர் பாடியன | 11 |
| சேக்கிழார் பெரியபுராணம் | 12 |

வேத ஆகம, சாத்திரங்களால் அறிவைப் பெற்று அறிவாற் ஒழுக்க நெறி நின்று அநுபவம் கைவரப் பெற்றாலும் ஒரோர் சமயம் பெருங்காயம் எடுத்து முடிந்தாலும் அது இருந்த பாண்டத்தில் அதன் வாசனை இருப்பதுபோல, மனவலி குறைந்தாலும் அதன் வாசனைப் பற்றுக்களில் மனதை இழுக்கவும் கூடும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
திறம்பலவும் வழிகாட்டிச்
செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய்
நின்ற நாளோ
மறம்பலவு முடையாரை
மயக்கந் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங்
கிருந்த நாளோ
பிறங்கியசீர்ப் பிரமன்றன்
றலை கையேந்திப்
பிச்சையேற் றுண் டுழன்று
நின்ற நாளோ
அறம்பலவு முரைப்பதற்கு
முன்னோ பின்னோ
வணியாரூர் கோயிலாக்
கொண்ட நாளே
திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசுசுவாமிகள்

### நாவலர் நல்வாக்கு

தெற்குநோக்கிய சந்நிதானத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்?


கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்

எந்தத் திக்குகளிலே கால் நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது?

கிழக்கிலும் வடக்கிலும் கால்நீட்டிநமஸ்காரம்பண்ணலாகாது.

(சிவாலய தரிசனவிதி)

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்

அவ்வப்போது திருமுறைகள் அன்பிலல் உள்ளத்தை உருக்கி நெறி பிறழாமல் நிற்க துணைசெய்வன ஆதலால் சைவ மாகளாகிய நமக்கு உயிர்த் துணையாம் ஆயினும் அவைகளை

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## அற்புதக் கூத்து

(சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் அவர்கள், தேவகோட்டை)

சித்தாந்த சைவர்களின் பிரமாண நூல்களாகச் செந்தமிழ் மொழியிலிருப்பன பன்னிரு திருமுறைகளும், பதினன்கு சாத்திரங்களுமாம். திருமுறைகள் பன்னிரண்டும் திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் சேக்கிழார் சுவாமிகள் வரையுள்ள இருபத்தேழு ஆசிரியன்மார்களால் செய்யப்பெற்றன. சாத்திரங்கள் பதினன்கும் திருவியலூர் உய்யவந்த தேவர் முதல் உமாபதிசிவம்வரையுள்ள ஆறு ஆசிரியன்மார்களால் அருளிச் செய்யப் பெற்றன. இத் திருமுறைகளும், சாத்திரங்களும் சிவபெருமான் அருளிச் செய்த வேத சிவாகமப் பொருள்களை விளக்குவனவாய் அவைகளைப் போல் அளவால் விரிவுபடாது கற்பவர்க்கு எளிமையில் விளங்குவனவாய் அமைந்துள்ளன. வேதங்களின் முடிபு வேதாந்தங்களாகிய உபநிடதங்களில் கிலை நாட்டப் பெற்றது அவ்வுபநிடதங்களின் முடிபு சித்தாந்தமாகிய சிவாகமங்களில் தெளிவு படுத்தப் பெற்றது. "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்பது சித்தியார்.

வேதத்தைப் பசுவாகவும், சிவாகமங்களை அப் பசுவிலிருந்து பெறும் பயன்களில் தலை சிறந்ததான பாலாகவும், சமயகுரவோராதியாரருளிச் செய்த திருமுறைகளை அப்பாலினுள்ளேயிருந்து பயன் தருகின்ற நெய்யாகவும்' சாத்திரங்களை அந்நெய்யிலே அமைந்துள்ள சுவையாகவும் நம்முன்னோர்கள் கூறுவர்' இதனை

'வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதும் தமிழதனின் உள்ளுறும் நெய் — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ நூலின் திறம்'

என்ற வெண்பால் அறியலாம். மானுடப் பிறவி பெற்ற நாமனைவரும் இனியொரு பிறவியெடுத்துத் துன்புறாதிருக்கவேண்டுமென்னும் பெருங் கருணையால் சிவபெருமான் அருளிச் செய்த வேதசிவாகமங்களின் சாரமே திருமுறைகளும்' சாத்திரங்களும் என்பதை இவ் வெண்பா தெளிவு பொருந்த நமக்குஉணர்த்துகின்றது.

திருமுறைகள் தோத்திரங்கள் என்று சொல்லப் பெறும். இத தோத்திர சாத்திரங்களாகிய இரண்டும்' சித்தாந்த சைவர்களாகிய நமக்கு இரண்டு கண்கள் போன்று விளங்குபவை. நமது கண்கள் எண்ணிக்கையில் பல வகையாயிருப்பினும் பொருளை உணர்த்துவதில் ஒரே வகையைச் சேர்ந்தனவேயாம்.

திருமுறைகளில் இறுதி இடத்தைப் பெற்று விளங்குவது பெரிய புராணமாகிய திருத் தொண்டர் புராணமாகும். இது வேத' சிவாகமங்களின் சாரமாய் இருப்பதோடு மட்டுமன்றி மற்றைப் பதினேரு திருமுறைகளின் சாரமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. திருத் தொண்டர் புராணத்தை முறையாகப் பாடங் கேட்டவர்கள் சித்தாந்த சைவ நுட்பங்கள் அனைத்தையும் எளிதில் அறிந்து கொள்ளுவர். பெரியபுராணத்தை ஒரு வரலாற்று நூல் என்றோ அல்லது ஒரு பெருங்காப்பிய மென்றோ கருதிப் படிப்பதைவிட' அதை ஒரு ஞான நூலென்றுகொண்டு தொன்று தொட்டுவந்த பாரம்பரிய நெறியில் அறிவும்' அனுபவமும் வாய்ந்த ஞான தேசிகர் ஒருவரிடம் அதனைப் பாடம் கேட்டவர் பெருநலத்தைப்பெற்று இன்புற்றுர்.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

கீலக ஞு மாசி மீ ௧௦-உ வெள்ளிக்கிழமை [1969]


## இனத் துவேஷத்தை உண்டாக்குதல்

—::—

சிங்கள மகாஜன சபைத் தலைவர் திரு ஆர். ஜி. சேனநாயக்கா தமிழ்ச்சாதி மீது பெரும் வெறுப்பையுடையவரென்பதை எவரும் அறிவர். அவர் தொடக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் வகித்துத் தமது அரசியல் பணியை ஆரம்பித்தனர். பின்னர் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு அவசரம் அவசரமாகச் சட்டங்களை இயற்றிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு முக்கிய உறுப்பினராகச் சேர்ந்து தமிழ் மக்களுடைய உரிமைகளை பாதிக்கக்கூடிய பெருதவிகளையும் பிரசாரங்களையும் புரிந்துவந்தனர். பின்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை விட்டுவிலகி சிங்கள மகாஜனக் கட்சியைத் தாபித்து அதன் தலைமைப் பதவியையும் வகித்துவருகின்றனர். அண்மையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. அண்ணாத்துரை அவர்கள் மறைவைக் குறித்து ஈழநாட்டிலுள்ள தமிழ் மக்கள் அநுதாபக் கூட்டங்கள் நடத்தி வருகின்றார்கள். மலைநாட்டிலும் அவ்விதமான கூட்டங்கள் நடைபெறுகின்றன. அக் கூட்டங்கள் மூலம் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளைத் தமிழ்மக்கள் அமைக்கப் போகின்றார்கள் என திரு. சேனநாயக்கா அஞ்சுகின்றார்.

தான் தாபித்த கட்சி வலுக்குறைந்த படியினால் தி. மு. க. கிளைகள் தாபித்தலைத் தடைசெய்வதற்கு அவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடைய உதவியை நாடுகின்றனர். பாராளுமன்றத்தில் தி. மு. க கிளைகள் தாபித்தலைத் தடைசெய்யவேண்டுமெனத் தான் ஒரு பிரேரணையைக் கொண்டுவரப் போவதாகவும் அதனை ஆதரிக்கும்படி அம்மையாருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர். தன்னுடைய பிரேரணைக்கு பொதுமக்களுடைய ஆதரவையும் பெறுவதற்குக் கிராமங்கள்தோறும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்போவதாகவும் அம்மையாரையும் அக் கூட்டங்களில் விரிவுரைகள் நிகழ்த்த வரும்வண்ணம் கேட்டுக் கடிதங்களெழுதியிருக்கின்றனர்.

திரு. சேனநாயக்காவின் போக்கு நாட்டில் இனத் துவேஷத்தை வளர்க்கத் துணைபுரியும். "தமிழ் நாட்டிலுள்ள தமிழர் பிறநீங்கலாக மற்றைய நாடுகளிலுள்ள தமிழர்கள் அவரவர்கள் வாழும் நாட்டையே தாயகமாகக் கொள்ள வேண்டும்" என காலஞ்சென்ற திரு. அண்ணாத்துரை வெளியிட்ட கருத்தை திரு. சேனநாயக்கா அறியவில்லைப் போலும்.

பாரதநாடு முழுவதிலும் ஏனைய பிரபல நாடுகளிலும் போற்றப்படுகின்ற ஒரு தமிழறிஞரது, அரசியல் ஞானியினதும் பிரிவைக் குறித்து ஈழநாட்டுத் தமிழ் மக்கள் கவலை தெரிவித்தால் அதனைக் குறித்து திரு. சேனநாயக்கா போன்றவர்கள் விபரீதமான விளக்கங்கள் கொடுத்தல் அவர்களது இனத் துவேஷத்தைப் பிரதிபலிப்பதாகும்.

திரு. சேனநாயக்கா ஒரு பௌத்த சமயத்தவர். எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவனாகவிருக்க வேண்டும் என்ற புத்த பெருமானுடைய போதனையை அவர் மறந்து செயலாற்றுவது வருந்தத்தக்கது. இது பௌத்த தருமமாகாது என்பதை அன்பாகச் சுட்டிக்காட்டுகின்றோம்.

---

### சைவப் புலவர் பரீட்சைகள் ஆவணி — 1969.

சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் பரீட்சைகளுக்குரிய பாடத் திட்டம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சைக் காரியதரிசி.
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

---

### அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தமிழ்மன்றத்தின் ஆதரவில் 13-2-69 வியாழக்கிழமை அறிஞர் அண்ணாத்துரையின் மறைவு குறித்துத் திரு. ஷண்முககுமரேசன் அவர்கள் தலைமையில் ஒரு அநுதாபக் கூட்டம் நடைபெற்றது. அண்ணாவின் அறிவு, பேச்சு வன்மை எழுத்து வன்மை அரசியல் ஞானம் ஆகிய பண்புகளைப் பற்றித் தலைவரும் மற்றைய அங்கத்தவர் சிலரும் உரை நிகழ்த்தினர்கள். நாட்டின் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு ஒற்றுமையைப்பேணினார் சிறந்த தமிழ்ப் பற்றுடையவர், சீர்திருத்தக் கருத்துடையவர், விஞ்ஞான உலகுக்கேற்ற வித்தகர், சமயத்தை வெறுத்தவரல்லர், இவைபோன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

---

### அற்புதக் கூத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற அண்ணலாரைச் சேக்கிழார் பெருமான் திருநீலகண்டநாயனார் புராணத்தில்

"மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்பலத்தே
ஆதியும் முடிவு மில்லா
அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார்........."

என்று குறித்தருளினார்.

மண்ணும், நீரும், நெருப்பும் காற்றுமாகிய பூதங்களுக்கு இடங்கொடுத்து, இங்கேயிருக்கின்ற வெளியாகிய ஆகாயத்தை நாமறிவோம். இந்த வெளியையும், ஏனைய எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு தான் ஒன்றினும் அடங்காது மேம்பட்டிருப்பது பரவெளி. தடைப்படாத அறிவுருவாயிருப்பது. இதையே "சிற்பர வியோமம்" என்று சேக்கிழார் பெருமான் பிறிதோரிடத்தில் உணர்த்துகின்றார். இந்தப் பரவெளியே சிற்றம்பலமாகிய ஞானாகாசம். இங்கே சிவபெருமான் ஆடுகின்ற திருக்கூத்தே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இடையீடின்றிச் செய்து கொண்டிருக்கின்றது. கூத்தாடுகின்ற குழகர் இடப்பாகத்திலிருக்கும் நமது தாயாகிய சிவகாமியம்மையை இமைப் பொழுதும் விடாது பார்த்துக்கொண்டேயிருக்கிறார். அவர் ஆடத் தொடங்கிய வேளை எப்பொழுது என்பது யாருக்கும் தெரியாது. அதுபோல அக் கூத்து முடியும் வேளையும் இன்னதென்ன எவரும் அறியார். ஏனென்றால் அதற்குத் தொடக்கமுமில்லை. முடிவுமில்லை. இப்படியொரு கூத்து நிகழ்வது அற்புதம் இல்லையா? இம்மாதிரிக் கூத்தை வேறு எங்கேனும் காண முடியுமா?

கூத்தாடுகின்ற பெருமான் அருகிலிருக்கும் அம்மையாரை நோக்கி நின்று ஆடுவதற்குக் காரணமென்ன? தூய்மையோடு வாழ வேண்டிய உயிர்த் தொகுதிகளனைத்தும் மல அழுக்கிற் படிந்து துன்புற்றுக் கொண்டிருக்கின்றன. அழுக்குப் படிந்த குழந்தைகளை அணைக்கக் கருதுகின்ற தந்தை அவைகள் இருக்கும் இருப்பில் எவ்வாறு அணைத்துக்கொள்ள இயலும்? அதனாலேயே அக் குழந்தைகளைப் பெற்ற அருளன்னையை நோக்கி அவற்றின் மலமாசுகளைக் கழுவித் தன்னிடம் சேர்ப்பிக்கும்படி குறிப்புக் கொடுக்கின்றார் கூத்தப்பிரான், அந்தக் குறிப்புத் தான் அவர் அம்மையை நோக்கி நின்று ஆடுவது. இதை இவ்வளவு நயமாக எடுத்துச் சொல்லச் சேக்கிழார் பெருமான் ஒருவராலன்றி வேறு எவரால் முடியும்?

நலமே தழைக.

(குமரகுருபரன் - 1969 - தை ஆண்டு மலர்)

---

## அது அதுவாதல்

[14-2-69 அன்று இந்துசாதனம் ஆங்கிலப் பதிப்பில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்]

கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலுள்ள முக்கியமான வித்தியாசம் யாதென்னின் கடவுள் தன்வயத்தன் சுதந்திரன். ஆன்மா அசுதந்திரன் பரதந்திரன் பந்த நிலையில் ஆன்மா பாசத்தினால் பந்திக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினால் ஆன்மாவுக்கு பசுவென்றும் ஒரு பெயருண்டு. கட்டுப்பட்டிருக்கின்ற ஆன்மாவை விடுதலைசெய்ய பந்தமில்லாத கட்டுப்படாத ஒருவரின் உதவி வேண்டும். "அவரே பதி பிணிப்பட்டோன் அசுதந்திரன் ஆகும். பிணிபெயரச் செய்வோன் நீடு சுதந்திரமுடையனொருவன்" என ஒழிவிலொடுக்கம் என்னும் ஞானநூல் தெரிவிக்கின்றது. பந்திக்கப்பட்டிருக்கும் ஆன்மாவும் சுதந்திரனாயும் நிறைவுடையவனாகியுமுள்ள கடவுளுடைய சந்நிதியிலேயே தொழில் புரியும். "இறைவன் தன் சந்நிதிக்கண் உலகின் தன் சேட்டை என்னும் மறைகளும் மறந்தாய்" என சிவஞானசித்தியாரில் காணப்படுகின்றது. இக் கருத்தை விளக்க கந்தபுராணத்தில் ஒரு கதை கூறப்படுகின்றது.

செம்மாந்து தற்புகழும் தேர்ந்துழவும் மருள
எம்மான் பிறன்போல இருந்து ஓர் துரும்பு நிறீஇ
அம்மா தன்செய்கை அனைத்தும் எனைக் காட்டினனே
நம்மாலும் முற்றும் சில எனைத் தனையனரே

முதலில் இக் கதை கேனோபநிஷதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஒருகாலத்தில் அக்கினி வருணன் வாயு முதலிய தேவர்களுக்குள் யார் வல்லவரென்ற வாதம் உண்டானது. அவர்கள் நீண்டகாலம் வாதம் செய்தனர். ஒருமுடிவையும் கண்டிலர் அப்பொழுது உமாதேவியார் அவர்களுக்கு முன் ஓர் இளம் பெண்ணைப்போலக் காட்சியளித்தனர் தேவர்கள் அப்பெண்ணை அடைந்து தங்கள் வாதத்தைத் தீர்த்துவைக்கும் வண்ணம் மன்றாடினர். அப்பொழுது சிவபெருமான் ஓர் இயக்கனுடைய வடிவுடன் தோன்றினார். அம்மையார் அவ்வியக்கனுடைய உதவியைப் பெறும் வண்ணம் வழிகாட்டினர். தேவர்கள் அவ்வியக்கனை அடைந்து தங்கள் குறையைத் தெரிவித்தனர். அப்பொழுது அவ்வியக்கன் தேவர்கள் முன்பாக ஒரு துரும்பை நிறுவி அதனை யார் அழிக்கின்றனரோ அவரே ஆற்றல் படைத்தவரெனக் கூறினர்.

அக்கினி தனது முழுவல்லமையுடன் அத்துரும்பை எரிக்கப்பார்த்தது. அக்கினியினால் அத் துரும்பை எரிக்கமுடியவில்லை. பின்பு வாயு அத் துரும்பை வாரி வீசப் பார்த்தது. முடியவில்லை. ஒவ்வொரு தேவனும் தனது ஆற்றலினால் அத் துரும்பை அசைக்க முடியவில்லை. ஈற்றில் தேவர்கள் தங்களிடத்தில் வல்லமையொன்றுமில்லை என்பதை உணர்ந்தார்கள். தங்களிலும் மேம்பட்ட ஒரு பரம்பொருளுடைய சக்தியினால் உலகம் இயங்குகின்றதென்ற உண்மையைத் தேவர்கள் அப்போது உணர்ந்துகொண்டனர்.

பிரமாவும் விஷ்ணுவும் நான் பிரமம், நான் பிரமம் என்று கர்வத்துடன் வாதஞ் செய்த காலத்தில் சிவபெருமான் அவர்கள் இருவருக்கும் இடையில் அக்கினிப் பிழம்பாகத் தோன்றி ஆன்மா பரதந்திரனென்ற உண்மையை உணரச் செய்தார்.

"புந்தி மயங்கிப் பொருங்காலை யெம்முன்னிற்
செந்தழலின் மேனிகொடு சென்றருளித் தொல்லறிவு
தந்து நினையுணர்த்தித் தாக்கமருந் தக்கினையா
லெந்திரம்யா முன்னனைய தியற்றுகின்றாய் நீயன்றே"

மனம்மயக்கத்தினால் பிரமாவும் விஷ்ணுவும் போர் செய்த காலத்தில் சிவபெருமான் அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு அக்கினி பிழம்பாகத் தோன்றி அவர்களுக்கு பழைய அறிவை நல்கி தன்னையுணரச் செய்து அவர்களுடைய போரையும் நீக்கினார். ஆன்மா இயந்திரமென்பதையும் அவ்வியந்திரத்தை உள்நின்று இயக்குகின்றவர் சிவபெருமான் என்பதையும் அவர்கள் அப்பொழுது உணர்ந்தார்கள்.

இக்கதைகள் மூலம் சிவபெருமானே பரம்பொருள் என்பதையும் மற்றைய தேவர்களும் பிறவிகளும் சிவபெருமானுடைய அருளினால் தொழிற்படுகின்றன என்பதும் புலனாகின்றது. தேவர்கள் சிவபெருமானுடைய ஆஞ்ஞையினால் தங்கள் கடமைகளைப் புரிகின்றனர். ஒரு அரசனுடைய மந்திரிமார்களும் வீரர்களும் ஏவலாளர்களும் அவனுடைய ஆஞ்ஞையின்படி அரச கருமங்களைப் புரிவதுபோல என்னலாம்.

பளிங்கு சார்ந்த பொருளின் நிறத்தைப் பெறும். செந்நிறமான பொருளைச் சேர்ந்தால் அது செந்நிறமாகயிருக்கும். கருநிறமுடைய பொருளை அடைந்தால் அது கருமை நிறமுள்ளதாகவிருக்கும் ஆன்மாவும் பளிங்குபோன்றது சார்ந்ததன் வண்ணமானது. பாசத்தைச் சேர்ந்தால் பாசமயமாயிருக்கும் சிவத்தைச் சேர்ந்தால் சிவமயமாயிருக்கும் சைவசித்தாந்தம் இதனையே சார்ந்ததன் வண்ணம் அல்லது அது வாதல் என அழைக்கும்.

# திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமந்திர மகாநாடு

[“இந்துசாதனம்” அபிமான கிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

**திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் 16 ஆவது திருமந்திரம் மகாநாட்டின் 3 ஆவது நாள் திருமந்திரம் மகாநாடு தைத் திங்கள் 5 ஆம் நாள் அன்று மாலை கம்பரின் திருவடிக் சுவட்டின் பாதையில் சென்று வருகின்ற காரைக்குடி திரு சா. கணேசன் அவர்கள் தலைமையில் தொடங்கியது**

ஆதீன வித்துவான் குடந்தை திரு ச மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரவேற்புக் கூறுகை 16 ஆவது திருமந்திரம் மகாநாட்டில் 3 நாளும் சிறந்தவர்களின் பேச்சுக்கேட்டு அனுபவமுள்ளவர்களாகிவிட்டோம். எவ்வளவு படித்தாலும் ஆசாரியனின் திருவடிப் பேற்றாலன்றி அனுபவமுள்ளவர்கள் ஆக முடியாது ஆகவே திருவாவடுதுறை ஞானபூமியில் வந்து போனாலும் கூட ஞானம் பெறமுடியும் என்றும் கூறினர்.

மகாநாட்டுத் தலைவரான காரைக்குடி திரு சா. கணேசன் தலைமையுரை கூறுகையில் வசமும் — தமிழும் பழமையானதாகும், இவைகள் இரண்டிற்கும் செவிலித் தாய்போல் திருவாவடுதுறை திருமடாலயம் இருந்து கொண்டும் வருகின்றது, தமிழ்த்தாதாவான உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைத்தந்த பெருமை இத் திருமடத்தைச் சார்ந்ததாகும் என்றும் கூறினார்.

திரு சா கணேசன் மேலும் பேசுகையில் திருமூலரின் திருமந்திர நூல் அற்புதமான பெரும் நூலாகும், ஆகவே திருமூலர் திருநாள் கொண்டாடுவது பெரும மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது, திருமந்திரத்தை தொட்ட இடங்களிலெல்லாம் தெய்வீகம் கமழ்கின்றது, நான்கு வேதங்களையும் தமிழ்மக்கள் நன்கு தெரிந்துகொள்ளவே, திருமூலர் திருமந்திரத்தை செய்துள்ளார். திருமூலர் தன் முனைப்பு அற்றவர், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்காகவே திருமூலர் திருமந்திரம் அருளிச் செய்துள்ளார் என்றும் ஆகவே திருவாவடுதுறையில் அரசமர நீழலிலே திருமந்திரம் என்ற அற்புத நூலை மக்கள் தங்களுடைய துன்பங்களை போகக் கொள்ளவே இயற்றியுள்ளார். திருமந்திர நூலைபயின்றால் அற்புதமான பயனைப் பெறலாம, என்றும் கூறினர்

“சந்நாதக்கலைச் செல்வர்” காஞ்சிபுரம் திரு வச்சிரவேல் முதலியார் B A B. T அவர்கள் “சாரூபம்” என்ற தலைப்பில் பேசுகையில் ஞானத்தின் பண்புதான் அன்பு ஆகும், அவ்வன்பே இன்பமாகும் அவ்வின்பமே சிவமுமாகும். என்றும் இவைகளை பெற திருமந்திரத்தைப் பயிலல் வேண்டும என்றும் கூறினர்

மாயூரம் A. V. C. கல்லூரி வித்துவான் திரு சோ சிங்காரவேலர் M A அவர்கள் “சாயுச்சியம்” என்ற தலைப்பில் பேசுகையில் திருமூலரின் திருமந்திரமென்னும் நூல் உயிருக்கும் — உடலுக்கும் பயன்படக்கூடிய நூலாகும் 20 ஆம் நூற்றாண்டாகிய இக்காலத்திற்கு திருமூலரின் திருமந்திர நூல் ஒத்துவரக் கூடிய நூலாக அமைந்துள்ளது. திருமூலர் திருமந்திரத்தில் அமுததாரை (சிறுநீர்) உபயோகம் பற்றி கூறப்படுகின்றது. ஆனால் வெகுசமீபத்தில் மாஸ்கோ (ருஷியா) வில் விண்வெளியில் ஒராண்டு காலப் பிரயாணம் செய்வதற்கு விண்வெளிக்குள் விஞ்ஞானிகள் தங்கிக்கொண்டு சிறுநீரையே மாற்றமசெய்து உண்டு வாழ்ந்தார்கள் என்ற செய்தியை செய்தித்தாளில் நாம்படித்தோம். ஆகவே திருமூலரின் திருமந்திரம் கருத்துக்கள் உண்மையாகி வருங்காலம் இக்காலம் என்றும் கூறிவிட்டு திருமந்திர நூல்படி வாழ்க்கையையும் நடத்தலாம் என்றும் கூறினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் திரு. அ, சாமியப்ப தேசிகர் M O L. அவர்கள் “சத்திநிபாதம் மந்தம்”

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## திருமுறைகளைக் கற்று

1-ம் பக்கத்து வளர்ச்சி

பயிற்றுவோரும் பயில்வோரும் பண்புடைய மரபு தவறாது அன்புடையவர்களாய் பயிற்றவும் பயிலவும் வேண்டும். சிவம் என்னும் செம்பொருளையே குறிக்கோளாகக் கொண்டவை திருமுறைகள். சிவத்தோடு நம்மைத் தொடர்புபடுத்தும் சிவதீட்சை பெற்று நித்தியமும் அனுட்டிக்க பஞ்சாட்சர செபம், தியானம் முதலிய செய்து வருபவராய் ஓதுவித்தும் ஓதியும் வருபவர்கள் இம்மை மறுமையின்பங்களைப் பெற்று வாழ்வார்கள் என்பது ஒருதலை. மது மாமிசம் முதலானவற்றை நீக்கி உடலும் உள்ளமும் தூயராய் அன்புடன் திருமுறைகளைப் பாராயணம் செய்பவர்களே மேற்கூறிய இன்பப் பயனை அடைவார்கள் எதுபோல என்னில் நோயுடையவர் அதை நீக்க உயர்வான மருந்தை உண்பவர் பத்தியம் தவறினால் நோயும் நீங்காது விபரீதபலனையும காட்டும். அது போல எனக்கொள்க.

“மந்திரமும் தந்திரமும்
மருந்துமாகி
தீராதநோய் தீர்த்தருள
வல்லான் றன்னை”

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்தமை மனதிற் பதிப்போமாக

திருமுறைகளை இக்காலத்தில் சிலர் மனம்போனவாறெல்லாம் பாடிவருவது வருந்தத்தக்கதாம். சைவத் திருமுறைகளில் அன்புடையவர்களாய்

“மாதொர் கூறனை வலஞ்சுழி
மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன்
வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார்சொலக்
கேட்டுகந் தார்தம்மை
வாதியா வினை மறுமைக்கும் பிணி
மைகளும் வருந்தம் வந்தடையாவே”

என திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவாறு நல்ல முறையில் வளர்க்க வேண்டும நோக்கங்கொண்ட திருமுறைக் கழகமெனப் பெயர் தாங்கித் தொண்டு செய்து வருகின்ற மெய்யன்பர்களையும் பாராட்டுகிறேன்.

என்று மின்பம்
பெருகு மியல்பினாலே
ஒன்று காதலித்
துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர்
வான் புகழ்
நின்ற தெங்கு
நிலவியுல கெலாம்”

—பெரியபுராணம்

—ⴎ—

## அணிந்துரை அரங்கம்

### பன்னிரு திருமுறைமலர்

வெளியீட்டோர்:
வட்டுக்கிழக்கு - சித்தன்கேணி-
திருமுறைக் கழகம்

சிவபெருமான் ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு அருளிச்செய்த முதல்நூல்கள் வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமாம. அவற்றினுடைய சாரத்தை பசுகரணம நீங்கி சிவகரணங்களைப் பெற்ற சமயகுரவர் முதலிய மெய்யடியார் தெய்வத் தமிழ் மொழியில் பன்னிரண்டு திருமுறைகளாக மக்கள் உய்யும் பொருட்டுத் தந்தருளினர். அவற்றைப் பொருளறிந்து ஓதுகின்றவர்கள் இம்மைப் பயனையும் மறுமைப்பயனையும் அடைவார்கள் நாட்டில் சைவசமயக் கருத்துக்களையும் ஆசாரத்தையும் பரப்பு நோக்கமாக வட்டுக் கிழக்கு - சித்தன் கேணி - திருமுறைக் கழகம் இச் சஞ்சிகையைப் பிரசுரஞ் செய்திருக்கின்றது காஞ்சிபுரம் சித்தாந்த வித்தகர் திரு க. வச்சிரவேலு முதலியார் சிவஸ்ரீ வை. மு. குமாரசுவாமிக் குருக்கள் முதலியவர்கள் ஆசியுரைகள் வழங்கியிருக்கின்றார்கள்.

பன்னிரண்டு திருமுறைகளைப்பற்றியும் பன்னிரண்டு பேரறிஞர்கள் சித்தாந்தக் கருத்துக்களுடன் சைவ சமய மரபின்படி பன்னிரண்டு சிறந்த கட்டுரைகள் எழுதி உதவியிருக்கிறார்கள். சைவ மக்கள் அவற்றைப் படித்து சிவஞானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். மேற்படி கழகம் இம்மலரை வெளியிட்டதன் மூலம் ஒரு சிறந்த பணியை நிலைநாட்டியுள்ளது எமக்கு அனுப்பிய பிரதிக்காக மேற்படி கழகத்தாருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

### இலவச சமய வகுப்பு

கல்வி பொது தராதரப் பத்திரப்பரீட்சை (சாதாரண/ உயர்) வகுப்புகட்கும், மற்றும் பாலபண்டித வகுப்புகட்கும் வகுப்புகள் போய, போயா முன் தினம் முதலிய நாட்களில் பிப 3 மணி தொடக்கம் 5 மணிவரை ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாசாலையில் (இல 1 பிரவுன் வீதி யாழ்ப்பாணம் ) நிகழவிருக்கிறது யாம். இளைஞர் கழகம் முன்னின்று நடாத்தும் இவ்வகுப்புகளில் தகுதியுடைய ஆசிரியர் கடமையாற்றுவார்கள். (ந, வி)

## நம்குலத்து நாயகன் — ஆறுமுக நாவலன்

— கவிஞர் இ முருகையன் —

11-12-68 இல் விவேகானந்த சபை (யில் நடைபெற்ற) நாவலர் குருபூசை விழாக் கவிதை

முன் வளர்ச்சி — 3

நம்மவரின் சமயநெறி வாழ்க்கை முறை
ஒழுக்கவியல் நாச மாக்கி
உபமுடைய வழிப்படுத்த ஒரு சதியா
புரிகின்றீர்? உணர்ந்து கொள்வீர்
செம்மறிகள் அல்லர் நமர்; உங்களது
கொள்கைகளைத் திணிக்க வேண்டாம்
மெய்மை நெறி எங்களுக்கும விளங்கும் தான்
என முழக்கம் செய்தான, வீரன். (8)

‘பழைய தமிழ் நூல்களினைப் படிப்பதனால்
என்ன உண்டு பயன்?’ என் றெண்ணி
அழியவிட்டார் நம்மவரும்; ஐயையோ
அவை மிகவும் அரிய செல்வம்
இழிவுசெய்தல் கொடும்பாவம்’ எனக்கொதித்துப்
பதிப்பிக்கும் எண்ணம் கொண்டான்.
விழுமை மிக்க தமிழ்த்தோன்றல்: மெய்மையிலே
உறைப்பான வேட்கை வைத்தான். (9)

பேசுவதும் எழுதுவதும் பிழையில்லா
தமைவதுவே பெருமை’ என்றான்
ஆசையொடும் இலக்கண நூல் அச்சடித்துப்
பரப்பிவைத்தான்; அருவி போன்று
வாசகங்கள வழிந்தொழுகி வழிநடத்தும்
வசன நடை வகுத்துத் தந்தான
தேசுபயில் சிந்தனையைத் தெளிவாகச்
சொல்லிவிடும சிறப்பு வாய்ந்தான் (10)

‘செத்தோரைப் பிழைக்க வைப்போம்; சித்துகள்
செய்கின்றோம்’ என்று செப்பிப் [நாம்
பத்திநெறி முழுமையும் பகிடி பண்ணல்
போற் சிலபேர் பசப்ப லானார்
‘எதுகளை அற்புதம் என் றேற்காதீர்;
நம்பாதீர்’ என்று சொன்னான்
சத்தியமே உயர்ந்ததென்ற தனிநெறியை
வற்புறுத்தித் தமிழன் ஆனான். (11)

## ஆலயங்கள்தோறும் புராணபடனம் திருமுறையோதல் நிகழவேண்டும்

சைவசமய அபிவிருத்திக்கழக ஆண்டுவிழா

“மக்கள் வாழ்வுக்குச் சமயக் கல்வி அவசியம். சமயக் கல்வியின்மூலமே மணவர்களிடம் ஒழுக்கத்தை நிலைநாட்ட முடியும். கூட்டு வழிபாடுகளில் திருமுறைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும். இன்றைய நிலையில் சினிமாப் பாடல்களைப் மோகங்கொண்டு பாடுவது கூடுதலாக உள்ளது. சினிமா மெட்டுக்கள் காலந்தோறும் மாறிவரும்போது முன்பு பாடிய பாடல் மறைந்து கொண்டிருக்கும். நாயன்மார்கள் நமக்குத் தந்த திருமுறைகள் என்றும் ஒரே பண் உடையதாய் இருப்பதைக் காணமுடியும். பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே திருமுறைகளைப் பாராயணம் செய்ய வேண்டும். பிழையின்றி படிக்கவும் பழக வேண்டும். சமயக் கல்வியை மாணவருக்கு போதியளவு போதிக்க வேண்டும். ஆலயங்கள் தோறும் புராணபடனம், திருமுறை ஓதுதல் என்பன நடைபெறவேண்டும். பக்தி நிலை உருவாக முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு. சாந்தையர்மடம் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 14-ஆவது ஆண்டு நிறைவு விழா 15-2-69 மாலை 6 மணியளவில். சைவப்புலவர் திரு வ கந்தசாமி ஆசிரியர் தலைமையில் நடைபெற்றபொழுது யாழ்நகர பிதா திரு. சி. நாகராசா பேசினார். அவர் சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கினார்,

இக்கழகம் 14 வருடங்களாகச் சமயப் பணிபுரிந்து வருவதை அறிந்து பாராட்டுகின்றேன். மேலும் பல பணிகள் செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். என்று தொடர்ந்து குறிப்பிட்டார்.

### நாமகளின் சிலை

யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையத்தின் முன்றிலிலுள்ள யாழ்நங்கையின் சிலையகற்றி அவ்விடத்தில் எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவான கல்விக்கு அதிபதியான நாமகளின் சிலையொன்றினை நிறுவுவதைக் கோருப ஒரு தீர்மானம் யாழ் மாநகரசபையில் கொண்டுவரப் பெறுமெனு அறிகின்றோம்.

நாவலர்பெருமானுக்கு யாழ். பொதுசன நூல்நிலையமுன்றிலில் சிலை நிறுவப்படவேண்டுமெனும் கருத்துவலுவடைந்துவருகிறது

### பித்துக்குழி முருகதாஸ் பஜனை

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் பித்துக்குளி. முருகதாஸ் சுவாமிகளை ஈழத்துக்கு அழைத்துள்ளார்கள். மார்ச் மாதம் 8 –ஆந் தேதி வரையில் ஈழத்தில் தங்கியிருக்கும்காலத்தில்சுவாமிகள் பல தலங்களைத் தரிசனஞ்செய்து கோண்டு தாய்நாடு திரும்புவார்கள். யாழ்ப்பாணத்திலும மலைநாட்டிலும பிறபல இடங்களிலும் பக்திப் பஜனை நிகழ ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன

உபந்நியாசம், இன்னிசை இன்னிசை விருந்துகள், வில்லுப் பாட்டு என்பன நடைபெற்றன,

## திருமந்திர மகாநாடு

(3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

என்றதலைப்பில் சொற்பொழிவு நடைபெற்று மகாநாடு முடிவுற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் மகாநாட்டின் நினைவாக "திருமந்திரம் எட்டாம் தந்திரம்" இரண்டாம் பகுதியும் திருமந்திரக் கட்டுரை 3ஆம்திரம்— காலச்சக்கரம்' என்ற இரு நூல்களைத் தொகுத்து அச்சிட்டு வெளியீடுகள் செய்து அனபளிப்புகள் செய்தார்கள்.

x x x

துணை ஆணையாளர் திரு சிங்காரவேலர் B. A., B L அவர்கள் மேலும் பேசுகையில் திருமந்திரம் 3000 செய்யுள்களில் "பஞ்சாக்ஷரம" என்ற சொல் அளவிட முடியாததாகக் காணப்படுவதால் திருமந்திரம் சிவபெருமானின் திருமேனியாகும், அத்திருமேனியே நடராஜப் பெருமானின் திருவுருவமுமாகும், திருமந்திர மேசிதம்பரமுமாம் என்றும் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் திருமந்திரம் சமய நூலாகவும் - ஆகம நூலாகவும - யோக நூலாகவும விளங்குகின்றது அவ்வளவு பெருமை வாய்ந்துள்ள திருமந்திரம இணையற்ற நூலாகும. வாழ்க்கைக்கு வழிகாட்டிய நூலுமாகும. சைவத்தின் உயர்நிலையாகவுள்ள "அன்பே சிவம்" என்பதைத் திருமந்திரந்தான கூறுகின்றது. ஆகவே சைவமக்கள் திருமந்திர நூலை நன்கு பயிலல் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

"திருவாசகமணி" திரு K. M, பாலசுப்பிரமணியம் அவர்கள் "சன்மார்க்கம்" என்ற தலைப்பில் பேசுகையில் ஆதீனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளின் சந்நிதி அருட்சுரங்கமாகவே இன்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றது, சமயத்திற்கும - வாழ்க்கைக்கும திருமந்திரமும - சிவஞான போதமும முடியும் அடியுமாக அமைந்துள்ளன என்று கூறினர்.

மேலும் பேசுகையில் அன்பை முதலில கடைப்பிடித்தே திருமூலர் திருமந்திரம் அருளினர்; உதாரணம் மூலன்சவமாகக் கிடந்ததைக கண்ட பசுக் கூட்டங்கள் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்ததை கைலாயத்திலிருந்து வந்த சித்தர் கண்டு வருத்தமடைந்து அந்த ஜீவராசிகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டிப் பேரன்புகொண்டு தன் உயிரைக்கொடுத்து ஜீவராசிகளின் கண்ணீரைத் துடைத்துக்காப்பாற்றிய பின்பே திருமந்திரம அருளிச் செய்துள்ளார் என்றும் கூறினர்.

வித்துவான் திரு. அ. நடேசமுதலியார் "சன்மார்க்கம்" என்ற தலைப்பிலும, "கலைமகள்" ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் "சற்புத்திரமார்க்கம" என்ற தலைப்பிலும், மதுரை பேராசிரியர் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை "தாச மார்க்கம்" என்ற தலைப்பிலும் சொற்பெபழிவுகள் நிகழ்த்தினர்.

—0—


## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் கரம்பன் ஊர்காவற்றுறையில் அடைவு பிடிக்கும் சிறீமதி சிவகலை கனகரெத்தினம் அவர்களின் அடைவு கடையில் 1966 ஆம் ஆடு தை மாசம் முதலாம் திகதி தொடக்கம் 1966 ம் ஆடு மார்கழி மாசம் 31-ஆம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1969-ஆம் ஆடு பங்குனி மீ 27-ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்பெறும்.

காரைநகர்; 1969 ஆடு மாசி மீ 18-ந் திகதி

வை. ஏரம்பமூர்த்தி

Auctioneer, ஏலவிற்பனையாளர்.

எம் 376 21, 28—2—69

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

தர்பு கனகநாயகம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை

இல. M. B. 9255 எதிராக வழக்காளி

1. ஆறுமுகம் கனகசிங்கம்
2. பெண் தயானமணி எளுவாவுடை தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 9255 ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1969-ம ஆடு சித்திரை மீ 8-ந் திகதி (8-4-69) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் அவ்வவ்வாதனங்களுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியுமாய் 7,417/- ரூபா இன்னும் 5000/- ரூபாவிற்கு 19-7-67 தொடக்கம் 27-4-68 வரைக்கும் பத்துவீதவட்டியும கூட்டிக் கூடியதொகைக்கு 27-4-68 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீதவட்டியும் செலவு ரூபா 460-65 சதமும் இதில் ரூபா 150 ரூபாபோக மிகுதி ஏற்பட்ட செலவு 286-25 வெலியாத்துச் செலவு 91-20 இனிமேலேற்படுஞ் செலவு 82-60,

ஆதன விபரம்

1- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளைக் கோவிற்பற்று. தெல்லிப்பளை கிழக்கிறை எளுவாவுடையும். கடகந்தாவையும், பர. நில. லா 8 குளி 14, 2/10 இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை செல்வநாயகத்திற்கும, கூட்டுப் பங்காளருக்குமுரிய வாதனம், வடக்கு முருகேசு நாகலிங்கத்தினுதனம். மேற்கு வழிவாய்க்கால், தெற்கு விசுவநாதர் சிற்றம்பலத்திற்குரிய வாதனம். இது முழுவதும் தெற்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும். தூர்வையுரிததும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

2- மேற்படி "எழுவாவுடையும் கடல் கந்தானையும்" பர நில. லா. 3 குளி 1, 8/10 எல்லை கிழக்கு வழிவாய்க்கால், வடக்கு முருகேசர் செல்லையாவினுதம், மேற்கு டச்சு ரோட், தெற்கு விசுவநாதர் சிற்றம்பலத்தினுதனமும், தூர்வை நிலமும் இதுமுழுவதும், வீட்டிற்பங்கும், வழிவாய்க்காலும் தூர்வை நிலமும்.

3. மேற்படி "எளுவாவுடையும் கடல் கந்தானையும்" பர. நி. லா. 2 குளி 9, 8/10 எல்லை கிழக்கு வழிவாய்க்கால், வடக்கு முருகேசர் செல்லையாவினுதனம் மேற்கு டச்சு ரோட், தெற்கு எதிரிகளினுதனம். இது முழுவதும் தெற்கெல்லைக் காணியில் தெற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை நிலத்தில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

தா. க. பொன்னுத்துரை J. P.

"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்

28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். M 374 21-2-69

10—2—69.

யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாப நிதி—

கொம்பனி லிட்

(ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்தற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினல் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சகிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வித வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, வீதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னப்பு சுப்பிரமணியம் மகன் மகேஸ்வரி வட்டுக் கோட்டை மேற்கு வழக்காளி

இல. M B 8872 எதிராக

1. விசுவலிங்கம் அப்பாத்துரை மகன் அருந்தவ ஈஸ்வரி வட்டுக்கோட்டை கிழக்கு
2. மரிமுத்தர் ஆறுமுகம் நாராயண சுவாமியும
3. பெண் யோன் மணியும் வட்டுக் கோட்டை கிழக்கு

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 8872-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த 'கோட்டுக் கட்டளைப்படி' பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1969-ம்ஆடு பங்குனி மீ 30 உ ஞாயிற்றுக் கிழமை முற் பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை :— முதல் வட்டி ரூபாய் 4480 /- க 25-2-67 தொடக்கம் -8-67 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 366-11

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு கொப்பறையன் புலமும் மசலின் புலமும் நில. 8 குளி 1 1/8 கொப்பறையன்புலம் நில 10 குளி 5½யும் வட்டுக்கோட்டை கிழக்கிலிருக்கும் இரண்டும் சேர்ந்து நில 18 குளி 6 5/8 இதில மேற்கு பக்கமாக நில 17 நாற்சார் வீட்டில பெரியவீடும், கூடம் இரண்டும், கள் முற்றமும் இரு கிழக்கு திண்ணையும், மாட்டுக் கொட்டில். செய்பயிர், வான்பயிர்களும், எல்லை கிழக்கு இதன் மிகுதியாதனம் வடக்கு முருகேசம் வேலை கை. பெ தங்கமாவுக்கும், விசுவலிங்கம் அப்புத்துரையின் உரிமைக்காரிஞதனம் மேற்கு செல்லையா கை. பெ நன்னிப்பிள்ளைக்கும், செல்லையா சுப்பிரமணியத்துக்கும், சுப்பிரமணியம் சபதிப்பிள்ளையின் உரிமைக்காரிஞதனங்கள் தெற்கு அருணாசலம் விசுவலிங்கத்துக்குரியாதனம் இதெல்லைப்படி [illegible] காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கில [illegible] பங்கும் தூர்வை வாய்க்கால் வழி [illegible] இந்தக் காணிக்கு போக்கு வரவு [illegible] வழியும்.

"வேல் பதி" சி. சங்கரப்பிள்ளை J P.

புத்தூர், 10-2-69. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

எம் 375 21-2-69

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. 45 இராசேந்திரா ரோட், கரையூர். யாழ்ப்பாணம் விபோ கைபெண் மேரிடபிள்ளை வழக்காளி

இல. M. B. 9759 எதிராக

காலஞ்சென்ற சுண்டிக்குளி யாழ்ப்பாணம் முருகன் ஐயனும் பெண் சிசிலியாவினுமுடைய ஆதனங்களின் பிரதிநிதி 72/18 இராசலிங்கம் வீதி கரையூர் யாழ்ப்பாணம் மைக்கேல் நாசறது எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9759-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி என்னால் 1969-ம் ஆடு பங்குனிமீ 24-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 4433/- க ரூபா 2500/-க்கு 9-9-1967 தொடக்கம் 25-10-1968 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 386-49 சதம

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று. கரையூர் இறை "பேயன்தலைமடைப் புலம்" பர நி. இல 1½. ஆறைல் ஆட்சிப் படியும் உத்தரவு பெற்ற உலாந்தா எம். அலோசியஸ் அவர்களால் 1946-ம் ஆடு கார்த்திகை மீ 11-ந் திகதி 1257-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவு படத்தின்படி பர. நி. இல இரண்டு குளி பதினொன்றுடன் எட்டில் மூன்று (பர. நி இல. 2 குளி 11, 3/8) வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கும் தெற்கும் முடிக்குரியவாதனம், வடக்கு இராசசிங்கி ரோட்டு மேற்கு குசை பேர்ளுந்டோவிற்கும் பெண் ஆனிக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட காணியடங்களும் அதற்குரியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

காரைநகர். வை ஏரம்பமூர்த்தி,

1969-ஆம் ஆடு மாசி மீ 5-ஆம் திகதி கொம்மிஷனர்.

Commissioner, Auctioneer & Valuer.

M. 377. 21-2-69.


ஆறிருதடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாம் ஒழுங்கை சிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 21—2—1969 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.